புதுச்சேரி பிராந்திற்கான வரைவு கடற்கரை மண்டல மேலாண்மை திட்டம் - 2019, செய்தி - தினமலர் - 05.10.24

புதுச்சேரி அரசு

# புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம்

3வது தளம், புதுச்சேரி வீட்டுவசதி வாரிய வளாகம்,
அண்ணா நகர், புதுச்சேரி-5.
தொலைபேசி: 0413-2201256, தொலைநகல்: 0413 2203494

## பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் அறிவிப்பு

இந்திய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் வெளியிடப்பட்டிருக்கும் கடற்கரை ஒழுங்கு முறைமண்டல அறிவிப்பாணை, 2019-ன் படி புதுச்சேரி அரசு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பிராந்தியங்களுக்கும் திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தை தயாரித்துள்ளது. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் செயல்படுத்தப்படும் அனைத்து செயல்களும் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையின் படி ஒழுங்குமுறைப் படுத்தப்படும். புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தை தீர்மானிக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக, உள்ளூர் மக்களின் ஆலோசனைகளை அறிந்து கொள்ள பின்வரும் விவரத்தின் படி பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப் பட உள்ளது.

| வ. எண். | திட்ட விவரம் | கேட்புரையின் தேதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| | புதுச்சேரி அரசு தயாரித்துள்ள புதுச்சேரி மாவட்டத்திற்கான திருத்தப்பட்ட கடற்கரை மண்டல மேலாண்மை திட்டம் | 06.11.2024 காலை 10.00 மணி | கம்பன் கலையரங்கம் புஸ்ஸி வீதி, புதுச்சேரி - 605 001. |

திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தின் நகல்கள் கீழ்கண்ட அலுவலகங்களில் கிடைக்கும். இதனை அனைத்து அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

1. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுச்சேரி.
2. புதுச்சேரி நகராட்சி ஆணையர் அலுவலகம், புதுச்சேரி.
3. உழவர்கரை நகராட்சி ஆணையர் அலுவலகம், புதுச்சேரி.
4. அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அலுவலகம், புதுச்சேரி.
5. பாகூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அலுவலகம் புதுச்சேரி.
6. புதுச்சேரி மாசு கட்டுபாடு குழுமம், புதுச்சேரி.

திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தின் வரைவு நகல்கள் புதுச்சேரி மாசுக் கட்டுபாடு குழுமத்தின் https://dste.py.gov.in/ppcc/CZMP-2019.html என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பற்றிய கருத்துக்களை பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை கீழ்கண்ட முகவரிக்கு எழுத்து மூலமாக 30 நாட்களுக்குள் சமர்பிக்க வேண்டும்.

**உறுப்பினர் செயலர்**
**புதுச்சேரி மாசுக் கட்டுபாடு குழுமம்,**
3வது தளம், புதுச்சேரி வீட்டுவசதி வாரிய வளாகம்,
அண்ணாநகர், புதுச்சேரி- 605 005.
மின்னஞ்சல் : dste@py.gov.in, ppcc@py.gov.in

**உறுப்பினர் செயலர்,**
**புதுச்சேரி மாசுக்கட்டுபாடு குழுமம்**

No.248/DIP/AD(Press) 2024 -25